(ஃ) இரப்பர் கழகத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பஞ்சப்படி உயர்வு வழங்காதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஜே. ஹேமச் சந்திரன், கோ. வீரைய்யன், எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் சார்பில் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டத் தோட்டத் தொழிலாளர்களுக்காக குறுமக்கூலி (Minimum Wages) கீழ்க்கண்டவாறு அரசு ஆணை எண் 1171, தொழிலாளர் துறை, நாள் 11-6-1985-ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது:—

அடிப்படை ஊதியம்	..	ரூ 6.35
கிராக்கிப்படி	..	ரூ. 4.80

ஆனால், அரசு ரப்பர் கழகத்தில் தொழிலாளர்களுக்கு 1-8-85 முதல், கீழ்க்கண்டவாறு ஊதியமும், கிராக்கிப்படியும் கொடுக்கப்பட்டு வருகிறது:—

முதல் தரம்

	ஊதியம்.	கிராக்கிப்படி.	மொத்தம்.
களப்பணியாளர்	ரூ. 6.94	ரூ. 14.47	ரூ. 21.41
தொழிற்கூடத் தொழிலாளர்.	ரூ. 7.69	ரூ. 14.47	ரூ. 22.16
பால்வெட்டுத் தொழிலாளி.	ரூ. 7.24	ரூ. 14.47	ரூ. 21.71

இரண்டாம் தரம்

ஊதியம்	கிராக்கிப்படி	மொத்தம்.
ரூ. 6.56	.ரூ 14.47	ரூ. 21.03
ரூ. 7.26	ரூ. 14.47	ரூ. 21.73
—	—	—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1986 நவம்பர் 25

தனியார் ரப்பர் தோட்டங்களில் கீழ்க்கண்டவாறு தொழிலாளர்களுக்கு மொத்த ஊதியம் (அகவிலைப்படியும் சேர்த்து) வழங்கப்படுகிறது:—

களப் பணியாளர்	..	ரூ. 20.49
தொழிற்கூடத் தொழிலாளர்	..	ரூ. 21.24
பால்வெட்டுத் தொழிலாளர்	..	ரூ. 20.69

மேற்கண்ட விபரங்களிலிருந்து, அரசு நிர்ணயம் செய்துள்ள குறுமக் கூலியைவிட கூடுதலாகவும், தனியார் தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கூலியைவிட அதிகமாகவும் அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படுவதைக் காணலாம்.

2. சென்னை தொழிலாளர் துறை இணை ஆணையர் அவர்கள் முன்பாக முன்னாள் அரசு ரப்பர் தோட்ட நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களின் சார்பில் கலந்து கொண்ட தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும், 4-12-1979—ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, மேற்கண்ட ஊதியம் கொடுக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட ஒப்பந்தத்தின்படி, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1, ஆகஸ்ட் 1, டிசம்பர் 1 ஆகிய தேதிகளிலிருந்து கிராக்கிப்படி மாற்றம் செய்து தர வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை 1939-ம் ஆண்டை அடிப்படை ஆண்டாகவும், அவ்வாண்டின் வாழ்க்கைச் செலவு புள்ளி 100 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கூடுதல் ஒவ்வொரு ஐந்து புள்ளிகளுக்கும் பைசா மூன்று வீதம் கணக்கிட்டு கிராக்கிப்படியை மாற்றியமைக்க வேண்டும். இம்முறையில் கணக்கிட்டு 1-8-1985 வரை கொடுக்கப்பட வேண்டிய கிராக்கிப்படியை அரசு ரப்பர் கழகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய ஒப்பந்தத்தின் மூலம், இம் மாநிலம் முழுவதிலுமுள்ள தனியார் மற்றும் அரசு நிறுவனங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்கள் அனைவரையும்விட கூடுதலாக அரசு ரப்பர் கழகத் தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை இவ்விடத்தில் குறிப்பிடுவது மிகையாகாது. 1-12—85, 1—4—1986 மற்றும் 1—8—1986 தேதிகளில் மாற்றியமைக்கப்பட வேண்டிய கிராக்கிப்படி நிதிநிலை நெருக்கடியின் காரணமாக இன்னும் கொடுக்கப்படவில்லை.

3. மேற்கண்ட, தொழிலாளர் துறை அரசு ஆணையில் கூடுதல் விலைவாசிப்புள்ளி ஒவ்வொரு ஐந்து புள்ளிகளுக்கும் 1.6 பைசாதான் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அரசு ரப்பர் கழக தோட்டத் தொழிலாளர் ஒப்பந்தத்தின் பிரகாரம் கொடுக்கப்பட வேண்டியதோ கூடுதல் ஒவ்வொரு ஐந்து புள்ளிகளுக்கும் மூன்று பைசா.

1986 நவம்பர் 25] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

அரசு தொழிலாளர் துறையினரால் நிர்ணயிக்கப்பட்ட குறுமக்கூலியைவிட, அரசு ரப்பர் கழகத் தொழிலாளர்களுக்கு கூடுதலாக ஊதியமும் கிராக்கிப்படியும் வழங்கி வருவதால், மேலும் கூடுதலாக கொடுக்கப்பட வேண்டிய மூன்று தவணை கிராக்கிப் படியை நிதிநிலை நெருக்கடி காரணத்தால் கொடுக்க இயலாமையாலும், இதற்கு காரணமான ஒப்பந்தத்தை மாற்றியமைக்க தொழில் தகராறு சட்டம் பிரிவு 19-ன்படி கழகத்தின் சார்பில் 1–2–1986ல் நாகர்கோவில் உதவி ஆணையாளர், தொழிலாளர் துறை அவர்களுக்கு கோரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. இது பற்றிய சமரச பேச்சு வார்த்தை கடைசியாக 8–10–1986 அன்று தொழிலாளர் துறையின் உதவி ஆணையாளர் நாகர்கோவில் முன் நடைபெற்றது. ஆனால் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. இன்னமும் நிலுவையில் உள்ளது.

4. வழங்கப்பட வேண்டிய மூன்று தவணை கிராக்கிப்படிக்கும் தேவையான நிதிச் செலவீடு சுமார் ரூ. 4.60 இலட்சம் ஆகும். இது தவிர ஒவ்வொரு ஆண்டும் ஆகக்கூடிய தொடர் செலவிலும் ரூ. 1.5 இலட்சம் ஆகும். இயற்கை ரப்பருக்கு தற்போது மார்க்கெட்டில் கிராக்கி இல்லாததால், கழகத்தில் உள்ள ரப்பரை விற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அரசு ரப்பர் கழகத்தின் தற்போதைய பொருளாதார நிலை, இப்பெரும் தொகையை செலவு செய்ய இடம் தரவில்லை. இந்நிலையிலும் மிகுந்த சிரமங்களுக்கிடையே இவ்வாண்டு அக்டோபர் மாதத்தில் தொழிலாளர்களுக்கு 1985-66 ஆண்டுக்கான உரிய குறைந்தபட்ச போனஸ் 8.33% கொடுக்கப்பட்டுள்ளது.

5. ஏற்கனவே, செய்துள்ள ஒப்பந்தத்திற்குப் பதிலாக வேறு ஒரு ஒப்பந்தம் ஏற்படும் வரை முந்திய ஒப்பந்தத்திற்கு மதிப்பளிக்க வேண்டியுள்ளதால், அதன்படி கொடுக்கப்பட வேண்டிய கிராக்கிப்படி தவணைகளை இந்நிறுவனத்தின் நிதி நிலைமை சீரடைந்தவுடன், தொழிலாளர்களுக்கு தவணை முறையில் வழங்க அரசு ரப்பர் கழகம் முடிவு செய்துள்ளது.

(அஅ) இந்திரா காட்டன் மில்ஸ் தொழிலாளர் பிரச்சினை.

மாண்புமிகு பேரவை தலைவர்: திருவாளர்கள் ம. ஆபிரகாம், வி.பி. சிந்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்,